**வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட களுத்துறை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு உதவி புரிந்த வெளிநாட்டு மருத்துவ நிபுணர்களின் பங்களிப்புக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் பாராட்டு வழங்கப்பட்டது.**

ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, கனடா, நோர்வே, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், பஹ்ரேன் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் உலக தமிழ் அரங்கின் அங்கத்தவர்களாக உள்ள இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த பதினேழு மருத்துவ நிபுணர்களும், உள்நாட்டு மருத்துவர்களும் சர்வோதய சிரமதான இயக்கத்துடன் கைகோர்த்து ஜுலை மாதம் 2 முதல் 6 ஆம் திகதி வரை களுத்துறை மாவட்டத்திலும், ஜுலை 7 முதல் 10 ஆம் திகதி வரை மாத்தறை மாவட்டத்திலும் கிராமங்கள் மற்றும் வெள்ள நிவாரண முகாம்களில் சேவையாற்றியிருந்தனர். இந்த பத்து நாட்களுக்குள் சிறுவர் நிலையங்கள் மற்றும் அனாதை நிலையங்களை உள்ளடக்கி அண்ணளவாக 780 நோயாளர்களுக்கு மருத்துவ, பல் மற்றும் கண் சம்பந்தமான சிகிச்சைகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் மருத்துவர்களினால் 300 சோடி மூக்குக்கண்ணாடிகள் மற்றும் சூரியக்கண்ணாடிகள் மக்களுக்கு பரிசளிக்கப்பட்டிருந்தன.

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவுவதன் பொருட்டு தங்களுடைய சேவைகளை தன்னார்வத்துடன் வழங்கிய சர்வோதய இயக்கத்திற்கும், உலக தமிழ் அரங்கிலிருந்து வருகை புரிந்த மருத்துவத் தொழில் புரியும் தொகுதியினருக்கும் பாராட்டு வழங்குவதன் பொருட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் ஜுலை 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று நடாத்தப்பட்ட வைபவமொன்றில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்க அவர்களும், சுகாதாரம், போசணை மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, சிறைச்சாலைகள் சீர்திருத்தங்கள், புனர் நிர்மாணம், மீள் குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், எதிர்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.என்.சுமந்திரன் ஆகியோர்களும் இணைந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வில் அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா, மலேசியா, நோர்வே, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, தென்னாபிரிக்கா மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளின் மற்றும் இராசதந்திர தூதரக பிரதிநிதிகளும் ஐக்கிய அமெரிக்க உதவி வழங்கும் தாபனத்தின் (USAID) பிரதிநிதிகளும் பங்குபற்றியுள்ளனர்.

இந்த நிகழ்வில் உரையாடிய அமைச்சர் கருணாநாயக்க அவர்கள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவிகளை வழங்கும் நோக்கில் உலகெங்கிலுமிருந்து இலங்கைக்கு வருகை தந்த மருத்துவர்களின் காருண்யத்திற்கும், சமூக சேவை மற்றும் நல்லிணக்க முயற்சிகள், சமூகங்களை ஒன்றிணைப்பதில் அயராது பணியாற்றி வருவதில் எப்போதும் முன்னோடியாக திகழும் சர்வோதய சிரமதான இயக்கத்துடன் கைகோர்த்து இலங்கையிலுள்ள சமூகங்களுக்கிடையே நட்புறவுப்பாலங்களைக் கட்டியெழுப்புவதற்கு உதவிகளை வழங்கியமைக்காக தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டார்.

இந்த திட்டத்திற்காக தமது ஆதரவினை நீடித்துள்ள நோர்வே மற்றும் சுவிட்சலாந்து அரசாங்கங்கள் மற்றும் யுனிசெப் அமைப்பிற்கும் அமைச்சர் தனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார். மேலும் அவர் மிகக்குறுகிய அறிவிப்புக் காலத்தினுள், மருத்துவ மன்றத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம், மருத்துவர்கள் தமது பணியை முன்னெடுத்துச் செல்வதை இயலச் செய்யக்கூடிய முறையில் இத்திட்டத்திற்கு வசதி வழங்கிய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அவரது அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகளை தெரிவித்தார்.

இந்த திட்டம் ஊடாக அரசாங்கம் மற்றும் இலங்கை மக்களுடன் மிக முக்கிய பயணத்தை மேற்கொள்ள வழிவகுக்கும் வகையில் வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கை வம்சாவளியினருக்கு ஊக்குவிப்பு வழங்குகின்ற உலக தமிழ் அரங்கிற்கு தனது நன்றிகளை அமைச்சர் தெரிவித்ததோடு, இவர்கள் நாட்டில் சமாதானம், நிலைபேற்று நிலை மற்றும் முன்னேற்றத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்வதில் பங்காளர்களாக தொடர்ந்தும் செயற்படுவர் என தாம் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டிருந்தார். 'ஆயிரல் மைல் கொண்ட பயணம் ஒரு சிறிய படியுடனேயே தொடங்குகின்றது' எனும் சீன பழமொழியை நினைவுகூர்ந்து பேசிய அமைச்சர் கருணாநாயக்க, இந்த திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த முக்கியமான படிமுறையானது, வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுடன் இணைந்து நாட்டில் நிலையான சமாதானம் மற்றும் பொருளாதார முன்னேற்றங்களை உள்ளடக்கிய பயணத்தின் மிக முக்கிய படிமுறையாக அமையும் என தான் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்
கொழும்பு
2017 ஜுலை 14